வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி ஹூ (1889) ஆவணிமீ 28-ம் உ   அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி: 356

புத் - அஅ]   யாழ்ப்பாணம்:-   நள ஹூ   ஐப்பசி மீ   கஉ - உ   வெள்ளிக்கிழமை   (29 - 10 - 1976)   [இல: ௩௦

# பயபக்தி உண்டானுற்பயமில்லை

## நாவலம்பதியில் கந்தசஷ்டி விழா

மனிதராகிய நாம் மூப்பத்தாறு தத்துவங்களுக்கும் கட்டுப்பட்டு வாழுகின்றோம். இத் தத்துவங்களைக் கடந்து நிற்பவர் கடவுள். கடவுள் என்ற பெயர்க் காரணமும் இதுவே. நாம் காலத்திற்குட்பட்டவர்கள். இறைவன் காலத்திற்கு அப்பாற்பட்டவன். அவன் பெயர்களில் ஒன்று காலகாலன் என்பது. காலம் என்ற தத்துவத்தைக்கடந்தவன் என்பது ஒருபொருள். எமனுக்குப் பகைவன் என்பது இன்னெரு பொருள்.

இருபத்தேழு நட்சத்திரங்களையும் பெயர் சொல்லி அழைப்பவர்கள் முற்காலத்திலே கார்த்திகை முதலாக எண்ணினர்கள். தற்காலத்திலே அச்சுவினி முதலாக எண்ணுகின்றனர்கள். ஐப்பசி என்னுந் தமிழ்ப் பெயர் அச்சுவினி நட்சத்திரத்தைக் குறிக்கும். அச்சுவினி நட்சத்திரத்தன்று பூரணை கூடி வந்ததால் இம் மாதம் ஐப்பசி என அழைக்கப்பட்டது.

ஐப்பசி மாதத்தில் வளர்பிறையில் வரும் பிரதமை, துதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சட்டி ஆகிய ஆறு நாட்களும் மிக முக்

வளர்ச்சி 2-ம் பக்கம்

## என்ன குறை? என்ன கவலை?

### திருப்புகழ் விழாவில் சிறப்புரை

"முருகப் பெருமான் அருணகிரி திருவண்ணுமலை இராஜகோபுரத்திலிருந்து விழுந்த சமயம் அவரைக் காப்பாற்றி, உபதேசஞ் செய்து, 'என்னைப் பாடு' என்று பணித்தருளி, 'முத்தித்திருநகை' என்று அடியெடுத்துக் கொடுத்துப் பாடும்படி செய்தார். முருகனிடம் உபதேசம் பெற்று உண்மைப் பொருளை அறிந்து பெருமானது நல்லருளைப் பெற்ற நல்லடியார்களுள் முதன்மை பெற்றுச் சிறந்தவர் அருணகிரிநாத சுவாமிகள். அவர் பாடிய திருப் பாடல்கள் யாவும் முருகனே அருணகிரியாரின் மனதை இருப்பிடமாகக்கொண்டு முருகன் திருவார்த்தையாக வெளிவந்த திருப்பாடல்கள். அவன் பெரும்புகழ் கூறும் நற்பாடல்கள் அவை. மந்திர சக்தி வாய்ந்த பாடல்கள். பத்தியுணர்வையூட்டி பேரின்பத்தைத் தரவல்லன துன்பத்தை நீக்கவல்லன; மனதை ஒரு வழிபடுத்த — புலன்களை அடக்க — ஆசையை அறுக்க — கோபத்தைப் போகக — நோயை நீக்க - திருவருள் ஞானத்தைப்பெற வல்லமையுள்ளவை இப் பாடல்கள், வேறு எந்தப் பாடலும் இதற்குச் சமமானதாய் இல்லை! இத்தகைய மந்திர சக்திவாய்ந்த திருப் பாடலகள் இருக்க, இவைகளை மறந்து, எத்தனை எத்தனை நவீன இசைகளில் மயங்கி. சிலர் அல்லற்படுகின்றார்கள்? இவர்களையு நல்வழிக்கிழுக்கவேண்டும்; அருள் வழிப்படுத்த அருணகிரி தந்த அரிய செல்வமிருக்க எங்களுக்கென்ன குறை? எங்களுக்கென்ன கவலை? சிந்தியுங்கள்"

இவ்வாறு நல்லைத் திருஞான சம்பந்தராதீனத்தில் நிகழ்ந்த திருப்புகழ் விழாவில் சிறப்புரை வழங்குகையில் நல்லை ஆதீனம் மேலாளர் - சைவப் பெரியார் திரு. வே சபாபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார்கள.

இவ்விழா அகில இலங்கைத் திருப்புகழ மாமன்றத்தின் ஆதரவில் கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு ஆறு தினங்களும் தொடர்ந்து நிகழ்ந்தது, தினமும் உரையரங்கு, திருப்புகழ் இன்னிசைவிருந்து ஆகியநிகழ்ச்சிகள் இடம்பெறறன. உரையரங்கில். திருவாளர்கள், க, சிவராமலிங்கம். வித்துவான் சி, ஆறுமுகம், பண்டிதர் நீ சி. முருகேசு. சிவச்செல்வர் கே, நடராசா ஆகியோர் பங்குபற்றினர், இன்னிசை நிகழ்ச்சிகளில். நல்லை ஆதீனம் பண்ணிசை வேந்தன் இ. திருஞானசம்பந்தன், திருமுறைக்கலாநிதி எஸ் கே, சிவபாலன். செல்வி வசந்தகௌரி சண்முகராசா ஆகியோர் பங்குபற்றினர். திருப்பூங்குடி வி வி, கே ஆறுமுகம் அயர்கள் வேல்விருத்தம். மயில் விருத்தம் இவைகளை பக்கவாத்திய சகிதம் பாடினர்.

மன்ற உபதலைவர் ஆ துரைராசசிங்கம் விழாவுக்கு தலைமை வகித்தனர், செயலாளர் திரு. விஜயானந்தன் நன்றியுரை நவின்றனர். — ரகு"

## சிவஞானி, ஈசானசிவன் புங்கையூர். வைத்திய பூபதி. சின்னையா கணபதிப்பிள்ளையவர்கள்

# பரிபூரணம் எய்தினர்

### காஞ்சி. தொண்டைமண்டலாதீனம் குருமணிகள் வெளியிட்ட கருத்து

எண்பத்தெட்டாண்டுகள் சைவ சமயியாக நல் வாழ்வு வாழ்ந்த வைத்தியர் சின்னையா கணபதிப் பிள்ளை அவர்கள் 29-10-1976 பரிபூரணநிலை எய்தினர். இப்பெரியார் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் B. A. அவர்களின் அருமைத் தந்தையார் ஆவர்.

[தொண்டை மண்டலாதீனம் காஞ்சிபுரம் குருமகாசந்நிதானம் சிலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் 11 - 1 - 1972 - இல் இப் பெரியாரைப்பற்றிச் சாற்றிய உரையை ஈண்டுக் காண்க. ஆ - ர்.]



1969-ஆம் ஆண்டு திருக்கேதீச்சரத் திருவாசக மடத்திலே நிகழ்ந்த திருவாசக விழாவில் கலந்துகொள்ள சைவத்திரு. சரவணமுத்துச் சாமி அவர்களால் அழைக்கப்பெற்று வந்தோம். அவர் நமது பூர்வாச்சிரமத்திலேயே நன்கு தெரிந்தவர்கள். அவ்வாண்டு விழாவில் புராணபடனம். சொற்பொழிவு, சிவபுராண சிரவணம் முதலியவற்றைச் செய்து கொண்டிருந்தவரும் இலக்கண இலக்கியங்களையும் சமய நூல்களையும் கற்றும் கேட்டும் நினைந்தும் தெளிந்தும் அனுபவத்தில் கொண்டிருந்தவரும் சிறந்த வைத்தியருமா, இலங்கையில் புகழ் பெற்றவருமாகிய சைவத் திருவாளர் சி, கணபதிப்பிள்ளை அவர்களை அறிமுகம் செய்து கொண்டோம்.

இருவரும் மனம் விட்டுப் பல விடயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம் பிள்ளை அவர்களின் சித்தாந்த ஞானமும் புலமைத் திறமும், நினைவாற்றலும், நயம்படப் பேசும் வன்மையும் பண்டுப் பழக்க பக்தியும், திருவடியில் உறுதியான பற்றும், உறைப்புடைய அடிமையும், நிறைமொழி மாந்தர்க்குரிய பெருமையும் உடையவர் என்று அன்று அறிந்தோம். அப்பொழுது திருவருளைக் குறித்து வினவினுர்கள். அதற்கு விடை கூறுங்கால் சிவதீட்சை பெற்று ஞான நிஷ்டையில் இருந்து பர முத்தி அடைதற்கு இதுவே தக்க பக்குவம். இனி கட்டு நீங்கி வீடு பெறும் நோக்கம் ஒன்றே கொள்ள வேண்டும் என்றோம் அவற்றிற்கு இசைந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் 1972-ல் சிவ தீட்சையை விதிப்படி செய்வித்தோம்; அப்பொழுதே சிவஞானோதயம் உண்டாகப் பெற்றுர்கள். அதற்குரிய மெய்ப்பாடுகள் அன்று குழுமியிருந்தோர் உணரும்படி நிகழ்ந்தன, அப்போது "அன்றே எந்தன் ஆவியும் உடலும..." என்னும் திருவாசகத்தை உள்ளம் உருக, நாத் தழு தழுக்க கண்ணீர் மல்கிப் பாடிக் கொண்டு அபரா அன்பின் அரன்கழல் உணர்ந்தார்கள்

(வளர்ச்சி 2ஆம் பக்கம்)

## மகா கும்பாபிடேகம்

நாரந்தனை ஆவரந்தோட்ட வைரவ சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் ஐப்பசிமீ 19-ந் திகதி (4-11-76) வியாழக்கிழமை காலை 4 மணிக்கும் 9 மணிக்கும்இடையில் நிகழும் பூர்வாங்கக் கிரியைகள் 1-ஆந் தேதி திங்கட்கிழமை ஆரம்பமாகும், ——

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை

## சித்தாந்தத் தேர்வுகள் 1976.

விண்ணப்ப இறுதி நாள்: 25—11—1976.

விண்ணப்பப் பத்திரம் தேவையானோர் 15 சத முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

வ. கந்தசாமி,
தேர்வுச் செயலாளர்.
450, காங்கேசன்துறைவீதி;
யாழ்ப்பாணம்,

இந்து மாமன்றக்

## கொடித் தினம்

ஈழம் எங்கும் 29-10-1976 வெள்ளிக்கிழமை இந்துமாமன்றக் கொடித் தினமாக அவதானிக்கப்பட்டது.

இம் மன்றம் எடுத்துக்கொண்ட பணிகள் இனிது நிறைவேற இந்துக்கள் 'கொடி' யைப் பெற்று நன்கொடையைக் கொடுத்துத தொண்டு செய்யும் முறை பாராட்டுக்குரியது. ——

## கலைமகள் விழா

கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் 31 - 10 - 76 1 - 11 - 76 இரு தினங்களும் மாலை 6 . 00 மணி தொடக்கம் கலைமகள் விழா நிகழும்; சபையின் தடன வகுப்பின இறுதித் தேர்வலூ சித்திபெற்ற மாணவர்களுக்கு 1—ஆந் தேதி திங்கட்கிழமை சான்றிதழ்கள் வழங்கப்படும். ——

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

நள ஹூ ஐப்பசி மீ கங - உ வெள்ளி

## முன்னோர் கண்ட முறை

"இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்" என்று திருத்தொண்டர் தேவாரத்திற் கருத்துண்டு இறைவன் கழல் தொழுதெழுதலே மானிடப்பிறவியெடுத்தோர் கடமை என்பதைத் திருமுறைகள் யாவும் புலப்படுத்துகின்றன. ஆகவே மனிதனுக்குரிய வாழ்க்கை மரபு முன்னோர் வகுத்த முறையிலே தெற்றெனத் தெளிவாக விளங்குகின்றது.

மக்கள் பொதுவாக இடருற்றும் — தளர்வெய்தியும் — நோய்வாய்ப்பட்டும் அல்லற்படுகின்றனர் என்பது எல்லோரும் அறிந்த நிகழ்ச்சியாகையால் இந்தத் துயரம் தொடராது மன அமைதி நிலவுவதற்கு வழியிருந்தும் அவ்வழிச் செல்லாது தடுமாறுகின்றனரே யென்று நினைத்துச் செய்வதென்னவென் றறியாது நிற்பது விபரீதமாகும்.

ஆகவே முன்னோர் கண்ட முறை என்ன என்பதை மக்கள் அறிந்து கொள்ளக்கூடியதாக அறிவு நூல்கள் வெளியிடப்படுதலும் அவற்றைக் கல்லூரிகளிலும் கழகங்களிலும் பயன்படுத்துதலும் சமூகத் தொண்டர்களுக்குரிய பெரிய பணியாகும்.

திருமுறைகள் சமய சாத்திரங்கள் முதலியனவற்றிலுள்ள பேருண்மைகளை நாவலர் பெருமான் வினாவிடையாகவும் பாலபாடமாகவும் புராண சூசனமாகவும் மிகத் தெளிவாக வெளியிட்டுள்ளனர். இப்பணியைப் பின்பற்றிச் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளையும் 'சைவபோதம்' என்ற நெறி நூலை ஆக்கினர்.

பழங் காலத்திற் பாடத்திட்டத்திலே பாலர் வகுப்புத் தொடக்கம் ஆத்திசூடி; கொன்றை வேந்தன். வாக்குண்டாம. நல்வழி, நீதி நெறி விளக்கம். திருக்குறள், நாலடியார் போன்றவை தரத்துக் கேற்ற விதம் இடம்பெற்றன, 'குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்" என்ற அருங் கருத்துக்களை மாணக்கர்கள் மனத்திலே பதியவைக்கக்கூடிய வகையில் படித்துவந்தனர்.

முன்னோர் கண்ட முறை என்ற தொகுப்பில் நீதி நெறி வாக்கியங்களையும் சமய அநுட்டானத்துக்குரிய திருமுறை வரிகளையும் நன்கு சேர்த்துப் பாடசாலைகளில படிப்பித்தல் மிகவும் பயன்தரும் முயற்சியாகும்

தமிழப் பெரும் மரபு காலத்தால் முதியது. சமய ஒழுக்கததால் அமைவுள்ளது. வாழ்க்கையை நல் வளப்படுத்துவதற்கு முன்னோர் கண்ட முறையை இளஞ் சந்ததியார் நாளாந்தம் கற்றுத் தேறிக் கடைப்பிடித தொழுகுவது சாலச் சிறநத நெறியாகும்.

## சமய தீட்சை

ஐப்பசித் திங்கள் 27 - ஆம் நாள் (12-11-1976) கடைசி வெள்ளிக்கிழமையன்று கரணவாய் ஆதீனம் ஸ்ரீமத் கை, திருஞானசம்பந்தக் குருக்களவர்கள் மாணவர்களுக்கும் பிறருக்கும் சபை நாவலர் மண்டபத்தில் காலை 8 மணி தொடக்கம் சமய தீட்சை செய்து வைப்பார்கள்.

சமய தீட்சை பெற விரும்பும் ஒவ்வொருவரும் ரூபா நான்கு தெட்சணையாக வழங்குதல் வேண்டும், தீட்சை பெறுகின்றவர்கள் தங்கள் பெயர்களையும் விலாசத்தையும் குறித்த தகதிக்கு முன் சபைக்கு அறிவிப்பார்களாக.

யாவரும் ஆசார சீலர்களாக வருவார்களாக.

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 15-10-76.

மு. மயில்வாகனம்,
சமயப் பிரசார அமைச்சர்

## மகாஜனக்கல்லூரி சிவாலயம்

அநாதிமலமுத்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாகினும். அநாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கிப் போகமோக்ஷங்களை அடைய ஆலயத்தில் நிறுவப்படும் திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாம். இது நான்கு வகைப்படும். அவையாவன:—

1. ஆவர்த்தம்
2. அனுவர்த்தம்
3. புனராவர்த்தம்
4. அந்தரிதம்

ஆவர்த்தம்;— புதிதான ஓர் இடத்தில் சிவலிங்கம் வைத்துப் பாலப் பிரதிஷ்டை செய்து வழிபட்டுப் புதிதாகக் கோயில் கட்டிப் பாலாலய மூர்த்தியைக் கும்பத்தில் எடுத்துப் பின்னர் மூலத்தானத்தில் இருக்கும் மூர்த்தியிற் சேர்த்து அபிஷேகம செய்வதாம்.

அனுவர்த்தம் :— வெகுகாலத்துக்குமுன் கோயில் கட்டப்பெற்று பூசையில்லாமல் அழிய விட்டும் சிர்குலைந்தும் இருந்த, முன்போல் அவைகளைத் திருத்தி ஆலயம் அமைப்பித்துக் கும்பாபிஷேகம்செய்தலாகும்

புனராவர்த்தம்:— கர்ப்பக்கிருகம், விமானம், பிரகாரம், கோபுரம், பலிபீடம், முதலியனவைகளில் பழுது ஏற்பட்டாலும், வர்ணம் அழிந்தாலும் பாலாலயம் செய்து ஆலயத்தைப் புதுப்பித்து மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம செய்தலாகும்.

அந்தரிதம்: ஆலயத்திற் சோரன் சண்டாளன், நாய் முதலியன உட்சென்ற தீண்டியதன் காரணமாக மூர்த்தியின் பிரத்தியங்கம் உபாங்கம போன்றவைகளில் ஏதாவது பழுதுகள் ஏற்பட்டால் உடனே திருத்திச் செய்தல்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சிவகாமி சமேத ஆனந்த நடராசர் கோவிலில் நள வருஷம ஆவணி மாதம் 22- ஆம் நாள (1976-09-6) திங்கட்கிழமை ஆவணித் திருவோண நட்சத்திரத்தில் புனராவர்த்தனகும்பாபிடேகம் சிறப்பாக நடைபெற்றது. பகல் 11-45 12-45 மணிக்குமிடையிலுள்ள சுபமுகூர்தத்தில் தூபிஅபிஷேகம் நடைபெற்றது

மசவையம்பதி பிரம்மஸ்ரீ வைத்தியநாதக் குருக்களவர்கள பிரதம குருவாக இருந்து இந்தக் கும்பாபிஷேகத்தை நடததிவைத்தார். உபஅதிபர் திரு. ச. ஆறுமுகராசா அவர்கள் பவித்தரம் அணிந்து விழாவிற் பங்குகொண்டார். சைவப் பெரியார்கள் பலரும் ஆசிரிய ஆசிரியைகளும் மாணவ மாணவிகளும் விழாவைச் சிறப்புறச் செய்தனர்.

மங்கள இசை பண்ணிசை நிகழ்ச்சிகள்பரவசமூட்டின: சிவகாமி அம்பாள் சமேத ஆனந்த நடராசர் ஆலயத்தின் வரலாற்றிை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய திருநாள் இந்நாள் ஆகும். கோயிலிற் சைவப் பெரியாரும கல்லூரியின்முன்னாள் ஆசிரியருமாகிய திரு. சுன்னத்துரை அவர்களால் ஒரு திருப்பணி உபயமும திறககப்பட்டது. அன்று ஆலயம ஒரு புது மெருகுடன் காடசியளித்தது.

மங்கல வாத்தியங்கள் முழங்க ஆனந்த நடராசர் அலங்கார கோலத்தில் சிவகாமி அம்மையாரோடு வீற்றிருந்து திருவீதி உலா வந்தார். நடராஜப் பெருமான் பின்னர் அருள் நடனம ஆடினார், மாணவ மாணவிகள குமபிட்ட முறை உள்ளத்தை உருக்க வைத்தது. விழா ஒழுங்குகள் கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் வனப்புறச்செய்யப்பெற்றிருந்தது. — —

## மெய்கண்டதேவர் திருநாள்

ஐப்பசித் திங்கள் 7-ஆம் நாள் (23-10-76) மேற்படிகுருபூசை சைவபரிபாலன சபைஆதரவில் நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விசேட பூசையும் மெய்கண்டதேவ நாயனார் புராணபடனமும் நிகழ்ந்தன.

## சிவ ஞானி . . .

1 ம் பக்கத்து வளர்ச்சி

அதுமுதல் ஞான நிஷ்டையிற் பயின்று சிவோகம் பாவனையில் நீங்காது பயிற்சி மிகுதியால் சிவமயமாய் இருக்கின்ற மெய்ந்நிலையைப் பெற்றார்கள். இக் காலத்தில் இந் நிலையை இவர்கள்தாம் உற்றார்கள் என்பதில் ஐயமில்லை.

சிவ பக்தியின் மிகுதியாலும் சிவஞானத் தெளிவினாலும் சிவமாக சிவ நிஷ்டைகளாலும் இவர்களைச் சிவமென்று தெளிதல் சிவஞானிகளுக்கே எளிது.

வைத்தியர் அவர்கள் உமாபதி சிவத்தின் அருள் வாக்கிற்கு இலக்கியமாக விளங்கிய ஞானசீலர். இவ் வுண்மை ஞானிகட்கே புரியக் கூடியது. காஞ்சிபுரத்திலுள்ள தொண்டைமண்டல ஆதீனத்துச் சீடர்களுள் ஒருவராய் - இலங்கைப் புங்குடுதீவிலும் மிகச்சிறந்தவராய் விளங்கும் பெருமை எங்களுக்கு உரியதாயிற்று.

வாழ்க சித்தாந்த ரத்நாகரம் ஈசான சிவன் வளர்க அவர்களது ஞான நிஷ்டாபரம்.

"ஊனமின ஞானிநல்
யோகியுடல விட்டால்
தானற யோனைச்
சமாதியுள தங்கியே
தானவ னாகும்
பரகாயஞ் சாராதே
ஊனமின் முத்தராய்
மீளார் உணாவுற்றே'
— திருமந்திரம்

## நினைவாஞ்சலிக் கூட்டம்

அண்மையிற் சிவபதமடைந்த முது பேரறிஞர் சித்தாந்த வித்தகர் புலவர். சிவங். கருணாலய பாண்டியனாரவர்கட்கு நினைவாஞ்சலி செலுத்துவதற்கு ஈழத்துத் திருநெறியதமிழ் மன்றத்தின் ஆதரவில் ஒருகூட்டம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திரு. இரா. சபாநாயகம் அவர்கள் தலைமையில் ஐப்பசித் திங்கள் 14-ஆம் நாள் (30-10-76) சனிக்கிழமை பிற்பகல் மாலை 6 மணிக்கு நடைபெறும். திரு. இ. இரத்தினம் திருமதி, மகேஸ்வரி பாலகிருஷ்ணன், செல்வி நாகம்மாள் காசிப்பிள்ளை, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியவர்கள் உரை நிகழ்த்துவார்கள்.

## பயபக்தி . . .

1-ம் பக்கத்து வளர்ச்சி

கிய நாட்களாகும். இந்த ஆறு நாட்களும் நமது முன்னோர் நம்மை நல்ல மனத்துடன் நல்ல மொழியுடன் நல்ல உடம்புடன் இருக்குமாறு கட்டளை இட்டனர். நல்ல எண்ணங்களை எண்ணுதல், நல்ல சொற்களைச் சொல்லுதல், நல்ல செயல்களைச் செய்தல் என்பனவே அவை. இவற்றைக் கைக்கொண்டால் அழியும் இவ் வுலக வாழ்வில ஈடுபடுவோர் அழியாப் பேரின்ப வாழ்வை எய்துவர். இதனால் இவ் வுலக இன்பம். சுவர்க்க இன்பம், வீட்டுலக இன்பம் மூன்றுமே கிடைக்கும்.

மனித வாழ்வின் முக்கிய குறிக்கோள் கடவுள் உணர்வைப் பெறுதலாகும், இதை முன்னிட்டே கந்த சட்டி நோன்பு நோற்கப்படுகின்றது, உயிர்களுக்கு நல்ல குணங்கள் இரண்டு உண்டு. அவை இரண்டும் பொருந்தி இருந்தால் மனிதனுக்கு நல்ல பலனைச் செய்யும். பயம், பக்தி இரண்டும பிரிந்து இருக்காமல் ஒன்றாகச் சேரும்போது பய பக்தி ஆகின்றது. பயம் மாத்திரம் இருப்பின் அவனை அறிவுக் குறைவுள்ளவன் என்றே கூறுவர். பயத்தை உண்டாக்கியவர் அசுரர். அவர்கள் தீய வழியில் சென்று தேவர்களுக்கு அச்சத்தை உண்டாக்கித் தண்டனை அடைந்தனர். பக்தியைக் கைக்கொண்டோர் தேவர். இவர்கள் அசுரருக்குப் பயந்து பரமனிடம்பக்திசெய்து நன்மை அடைந்தனர். பயபக்தி உடைய தேவர் நன்மை அடைந்ததும். பயப்படுத்திய அசுரர் பயமின்றி அழிந்தொழிந்ததும் இந்த ஆறுநாட்கவிலதான்.

ஆதலினால் இந்த ஆறுநாட்களும பயபக்தியோடு முருகப் பெருமானை வழுத்தினால் தேவருடைய வாழ்வு நமக்கும்கிடைக்கும. வால்மீகி தம் இராமாயணத்தில். பாலகாண்டத்தில் விசுவாமித்திரர் வாயிலாக: "எவராயிருப்பினும் கார்த்திகேயனிடத்தில் பக்தி பண்ணுபவர் புத்திரப்பேறு முதலாம செல்வங்களைப் பெறுவர்" என்று சொலலியிருப்பது கவனிக்கத் தக்கது.

கண்ணபரமாத்மா கீதையிலே "நான் தேவ சேனைபதிகளுக்குள் கந்தனாயிருக்கிறேன் என்று குறிப்பிடுகின்றார். "சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்" என்பது ஒரு பழமொழி சட்டிக்குள் ஏதும் இருந்தால அகப்பைக்குள் வரும் என்பது மேலெழுந்த கருத்து. சட்டி விரதத்தால நோன்பிருத்தல் புத்திர உற்பத்தி உண்டாகும் என்பது உண்மைக் கருத்து;

மண்ணில் விதை ஒன்றை முளைக்கப் போட்டால் அது முளைத்து வரும்போது மூவகை நிலையை நாம காணலாம்; மறைவி நிலை, காணும்காணா நிலையாகிய முளைதது வரும் நிலை நன்றாக வெளிப்பட்டுத் தெரியும நிலை என்பனவாம், இதனையே இறைவனுடைய நிலையிலும் அருவம அருஉருவம. உருவம் என்று சாத்திரங்கள் பேசுகின்றன, பக்தியிலும் அந்நிலைகள உள்ளன' பக்தியின் நிலைக்குத்தக நாம் கடவுள் உணர்வைப் பெறலாம்.

[நாவலப்பிட்டி அருள் மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் நடை பெற்ற கந்தசஷ்டி விழாவில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா முத்தையா ஆற்றிய உரையின் சாரம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயக் கிரியைகளும் வழிபாட்டு முறைகளும்

கலாநிதி. கோ. சுந்தரமூர்த்தி எம். ஏ. பி,எச்டி.
( மலாயாப் பல்கலைக் கழகம் )

( முன் வளர்ச்சி — 2 )

திருவுருவங்களில் குடிபுகுந்த இறைவன் அவற்றிலேயே நிரந்தரமாக விளங்குவது கிடையாது. திருவுருவங்களில் இறைவன் குடிபுகுந்து நித்ய சாந்நித்தியம் பெற்று விளங்கிக் கொண்டிருக்க வேண்டுமானால் அதற்காகக் கிரியைகள் செய்தவண்ணம் இருக்க வேண்டும். கிரியைகளைச் சரிவரச் செய்யாமல் இருந்தால் இறைவனின் சாந்நித்தியம் திருவுருவங்களில் தொடர்ந்து விளங்காது என்பதையும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

திருவுருவங்களில் விளங்கும் இறைவன் பக்தர்களுக்கு அருள் பாலிக்க வேண்டுமானால் அதற்குக் கிரியைகள் தான் துணை செய்ய வேண்டும். கிரியைகளின் துணையின்றி இறைவனின் அருள் நம்மை வந்து அடையாது என்பதை நம் ஆகமங்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

கோவில்கள் கோவில்களாக விளங்கவும், திருவுருவங்கள் திருவுருவங்களாக விளங்கவும், அருள கிட்டவும் உதவுகின்ற கிரியைகளை மிக முக்கியமானவையாக நாம கருத வேண்டும். கோவில்களில் நிகழும் கிரியைகளைப் பொதுவாக மூன்று வகைப்படுத்திக் கூறலாம். காலையிலிருந்து முன்னிரவு வரை செய்யப்படுவன அன்றாடக் கிரியைகள். அவற்றை நித்தியக கிரியைகள் என அழைப்பதுண்டு. முக்கியமான விசேட நாட்களில் சிறப்பாகச் செய்யப்படும் சிறப்புப் பூசைகள், நைமித்திகக் கிரியைகள் எனக் கூறுவர். நித்திய பூசையும், நைமித்திக பூசையும் எந்த ஒரு தனிப்பட்ட நபர் அல்லது நபர்களின் நன்மைக் கருதியும் செய்யப்படுபவை அல்ல. அவை கோவில்களின் நன்மைக்காகவும், சமுதாயத்தின நலனைக்கருதியும் திருவுருவ சாந்நித்தியம நிகழவும் செய்யப்படுபவையாகும. இவைகளைத தவிர மூன்றாவது வகை ஒன்றுண்டு. இதற்குச் காமியக் கிரியை அதாவது விருப்பம் நிறைவேற்றும பூசை எனப் பெயர் தனிப்பட்ட மனிதன் அல்லது மனிதர்களின் ஆசைகளையும் தேவைகளையும் நிறைவேற்றச்செய்யப்படும் கிரியை இதுவாகும. இவை தவறானவையோ அனறிக் கண்டிக்கப்பட வேண்டியவையோ அல்ல. அவைகளும் முறையான கிரியைகள்தான.

இம்மூன்று வகைக் கிரியைகளையும பற்றி ஆகமங்கள் மிக விரிவாகப் பேசுகின்றன. இந்தியாவில் உள்ள பெருங் கோவில்கள் யாவற்றிலும் இப் பூசைகள் யாவும் மிக விரிவான அளவில் இயற்றப்படுகின்றன. அவற்றையெல்லாம் மலேசியாவில் காண்பதோ, நடைபெறச் செய்வதோ இயலாத காரியம். ஆகமங்கள் கூறும் விரிந்த கிரியைகளின் முக்கிய அமிசங்களைப் பார்த்துவிட்டு, அவற்றை மலேசியக் . கண்ணோட்டத்தில் பிறகு காண முயல்வோம்.

அன்றாடம் நிகழ வேண்டிய நித்தியக் கிரியைகள் பகற் பொழுதின் சில குறிப்பிட்ட நேரங்களில நடைபெற வேண்டும் என்பது ஆகம விதி. இந்தியாவில் உள்ள ஒருசிலகோவில்களில் நடைபெறுகிறது ஆனால் அன்றாடம ஆறு கால பூசை செய்வதுதான் மிகப்பெரிய கோவில்களிற் கூட வழக்கமாக இருக்கிறது. ஆகவே ஆறுகாலப் பூசைதான் நடைமுறைக்குச் சிறந்தது எனக் கூறலாம. இவ்வாறு காலபூசை உஷத்கால பூசை, காலைச் சந்தி பூசை, உச்சிக்கால பூசை, சாயரட்சைப் பூசை, இரண்டாம கால பூசை, அர்த்தசாம பூசை எனப் பெயர்பெறும் இவற்றுக்குச் சில இடங்களில வேறு பெயர்களும வழங்குவது உண்டு.

நன்றி : ''இந்து சங்கம்'' மலேஷியா. ( 1976 )

## உடற்பயிற்சி

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிலும மாணவர் அரிய உடற்பயிற்சிகளில் திறமையெய்தித் தம் சாதனைகளைக் காட்டினார்கள், மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா அவர்கள் தலைமையில் நிகழ்ந்த காட்சியில் மாணவர்கள் சென்ற 19-10-76 செவ்வாய்க் கிழமை மாலை யோகாசனம், கோபுரம சக்தியின சாதனைகள் போன்ற அதிசயங்களைச் செய்து காட்டினர்.

## பனைவளம் பெருகும்

''பஞ்சம்போக்கும்பனை எங்கள் பாரம்பரியப் பயிர்'' நாங்கள பனைமரததை ஆண்டு தோறும பலலாயிரககணககில உற்பதது செய்தல் வேணடும, உள்ளுராட்சி மன்றங்கள; கிராம முன்னேற்றச்சங்கங்கள. சனசமூக நிலையங்கள், பாடசாலைகள குடியேற்றக் குடியிருப்புகள் பனைவளம பெருககுவதாயின நாங்கள பலலாயிரம பனம விதைகள அனபளிபபுச் செய்து உஙகளை ஊககுவிபபோம. பனைவளம பெருக்கிய பணபாளர் என்றும் பராவட்ப்பத்திரம் வழங்கி வருகிறோம. வட பகுதியில உள்ள பாடசாலைகள கலலூரிகள எமக்கு இலட்சக் கணக்கில பனம விதைகளை உபகரிக்கிறார்கள. எல்லோரும பனையை நடுவோம பனை எங்களைக காககும, இவ்வாறு மில்க்வைற் தொழிலதிபர் சுதந்திர புரததில அணமையில் குடியேறற வாசிகள் மத்தியில் பேசுமபோது கூறினார். குடியேற்றவாசிகள நீளமான வீதியில் இரு மருங்கிலும் பனம் விதைகளை நாட்டினர், ந. நி:

## சைவ பரிபாலன சபை

### சைவ சமயபாடப் பரீட்சை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் ஆண்டு தோறும் நடாத்தும் சைவ சமயபாடப் பரீட்சை 14-11-76 ஞாயிற்றுக் கிழமை ( பாட விதானத்திற் ) குறித்தபடி நடைபெறும.

## சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் நிகழ்ச்சிகள்

கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு. சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் 23-10-76 தொடக்கம் 10 நாட்களுக்கு கந்த சஷ்டி விழா விசேட அபிடேகம், சண்முகார்ச்சனை, கந்தபுராணப் படிப்பு, சொற்பொழிவுகள் பக்திப் பாடல்கள் முதலிய நிகழ்ச்சிகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றன, — —

இந்த நோய்க்கு ..........

## எந்தப் பரிகாரம் ?

வைத்தியர்கள் தொழிற்சங்க முறையில் ஈடுபட்டு தமது கோரிக்கைகளைச் சாதிக்கமுற்பட்டிருப்பது புதியதோர் வருத்தத்தை மன வருத்தத்தை நோயாளருக்கு உண்டுபண்ணியிருக்கின்றது.

நோயாளி வைத்தியனையே தஞ்சமென்றிருக்க, வைத்தியரோ அவனையே பணயம் வைத்து தனக்கும் அரசுக்குப் இடையேயுள்ளவேற்றுமையை நீக்க முயல்வது முற்றிலும் பொருத்தமற்றது.

யாராவது நோயாளிதுன்பப் படுவதைக் கண்டு வாளாவிருக்க முடியுமா ?

மருத்துவம் என்றது மகத்துவமானது, மருத்துவர்கள் அதன் மகத்துவத்துக்குப் பங்கம் விளைவிக்கும் முறையில் ஒழுகுவது மனச் சான்றுக்கே மாறல்லவா... ?

## ''கற்பகதரு முத்திரை!''



பத்தர் : ''பனை உற்பத்திமாதமாக வருகிற கார்த்திகையை இல. பனந் தொழில் அபிவிருத்திச் சபை பிரகடனப்படுத்தியிருக்கிறது. கச்சதீவு உட்பட ஐந்து இலட்சம் விதைகளை நாட்ட முடிவு செய்திருக்கின்றார்களாம்! சன சமூக நிலையங்கள், சபைகளின் உதவிகளை வேண்டியிருக்கின்றார்கள் !

சித்தர் : ''பொருளாதாரமே பெரிய ஆதாரம்' என்று பேசுவோர்முதல் சகலரும் சிந்திக்க வேண்டிய ஓர் செய்தி வாயார நம் போற்றவேண்டிய நற் செய்தியப்பா! அவர்கள் எண்ணம் மாபெரும் வெற்றியைக் கொடுக்கட்டும்! நாம் இதிற கருத்துடன் ஈடுபடவேண்டும்; பனைவளம் பெருக நம் வாழ்வு ஒளி மயமாகும்! நமமவருட் பலர் வருங்கால சிந்தனையைத் துறந்து வாழ்கின்றனரே! ஒலிபெருக்கி பிடித்து, மாலை போட்டு, மேள தாளந் தட்டி பெரிய விழாக்கள் வைத்தாற் போதுமா ? குறைந்தது ஒரு கோடி பனம் விதைகளாவது நாட்ட திட்டமிடவேண்டும்— இவ் வெழுச்சியை நினைவூட்ட கற்பகதருவின் காட்சி ஒளிரும் முத்திரை ஒன்றை வெளியிட நம அரசு முன்வரவேண்டும்?''

''நாயன்மார்-நாதன்''

## திருத்தம்

22-10-76 இந்துசாதனத்தில் வெளிவந்த வழக்கு இல. ஈடு 537-ல் விற்பனவுத் திகதி தவறுதலாக 10-11-76 என்று இருப்பதை 24-11-76 என்று திருததி வாசிக்கவும். அதே திகதியில் வழக்கு இல. 446-ல் விற்பன திகதி 3-11-76 என்று இருப்பதை 17-11-76 என்று திருத்தி வாசிக்கவும்,

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்
இல ஈடு 12174

1. செல்வபாஸ்கரன் துரைநாயகமும் பெண்
2, நேசமணியும் இருவரும் சுன்னாகம்
எதிராக                வழக்காளிகள்
1. சின்னத்தம்பி சிவஞானமும் பெண்
இறந்துவிட்டார் 2, நாகேஸ்வரியும் இருவரும்
இணுவில் 1-ம் எதிராளி இறந்த 2-ம் எதிராளியின் சொத்துக்கு சட்டமுறையான பிரதிநிதியாக நியமிக்கப்பட்டது.
எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப் படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ்விபரிக்கப்பட்டிருக்கும ஆதனங்கள் 1976-ம் ஆண்டு மார்கழி மாதம் 1ந் திகதி ( 1-12-76) புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிகளுக்கு ரூபா4812.50/.வும் மேலும் ரூபா 3000/- க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10 வீத வட்டியும் வழக்கு அணைத்த திகதியாகிய 1973ம் ஆண்டு வைகாசி மாதம் 31ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975ம் ஆண்டு ஆனி மாதம் 6ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 704.65. இதில் வழக்குச் செலவு ரூபா 704.65 கட்டப்பட்டுள்ளது.

### ஆதன விபரம்

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவிற் கோயிற்பற்று இணுவில் இறை ''சேவகன் கலடு'' நிலபபரப்பு 15/16 கிட்டங்கியும் தென்மேற்கேயிருக்கும் கிணற்றுப் பங்கும வழிவாய்ககாலுரித்தும் எல்லை கிழக்கு ரேட்டு வடக்கு சுப்பிரமணியம பெண் பரமேஸ்வரியினுதனம் மேற்கு குறிதத பரமேஸ்வரியின் ஆதனமும் கிணறும் வழிவாய்க்காலும் தெறகு ஒழுங்கை. இது அடங்கலும் பதிவு H 331/167.

2, ஷை உடுவில் இறை விளக்குடையாள் நிலபபரப்பு 3. மேறகுக்காணியில் இருககும் கிணற்றில தணணீர்ப்பங்கும் மேற்க் கெல்லைக் காணியின தெற்கெல்லைக்கருகாக வழிவாய்க்காலும் வீடும், கிணறும், செய்பயிர் வான் பயிரகளும் எல்லை கிழககு சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியத்தினுதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு செல்லத்துரை பெண் பூபணியினுதனம் தெற்கு செலலையா பெண் இராசமமாவின் ஆதனம இது அடங்கலும பதிவு 278/312

கா. முத்துக்குமாருஐயர்
நீதிமன்ற ஆணையாளரும,
கொமிஷன் விலைமதிப்பாளரும்

தங்கவேல் ஆலயம்,
சந்நிதி வேல,
பருத்தித்துறை 1-12-76

82 29-10

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்டக் கோட்டில்
வழ. இல. ஈடு. 12824

ஆறுமுகம் வேலுப்பிள்ளை கைம்பெண் பூரணம்மா
எதிராக                வாதி
1. முத்துத்தம்பி தர்மலிங்கமும் 2. பெண் ஈஸ்வரி இருவரும இல: 63 அல்வஸ்ஒழுங்கை கொட்டகேனு 3 சங்கரப்பிள்ளை கைம்பெண சிவபாக்கியமும் கொல்லன்கலட்டி மாவிட்டபுரம்    பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்டக் கோட்டின் ஈடு 12824ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1976-ம் ஆண்டு மார்கழி மீ 3-ம் திகதி (3-12-76 ) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 25025/- இன்னும் 20000/-த்துக்கு 16-11 71 தொடக்கம் 6-2-73 வரைக்கும் 9 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 746/41½ தீர்வைத்தொகையில் ரூபாய் 10000 கொடுபட்டுள்ளது.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோயிற்பற்று மாவிட்டபுரமிறை 'கிளானை'' நிலப்பரப்பு 5 (ஐந்து) செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் வீடும் இந்த நிலப்பரப்பு ஐந்துக்தும் எல்லை கிழக்கு சுப்பிரமணியம பெண தங்கம்மாவினுதனம வடக்கு சின்னப்பெரடியார் முருகருக்கும் பெண் இலட்சுமிக்குமுரிய வாதனம். மேற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் பூரணத்திற்குரிய வாதனம் தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைப்படி இதடங்கலும் வடமேற்குப்பக்கமாய் தாமர் குருநாதருக்கும் மறு பேருக்குமுரிய கிளானை என்னும் காணிக்குள் இருக்கும் கிணற்றில இதற்குரிய பங்கும் வாய்க்கால் வழி உரித்தும்.

செ. விசாகரெத்தினம்
விற்பனவு ஆணையாளர்

133 பருத்தித்துறை ரோட்டு
நல்லூர், யாழ்ப்பாணம் 3-10-76

80 29-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

காடு புக்கார் இனிக்காணார் கடுவெளி,
கூடுபுக் கானது ஐந்து குதிரையும்
மூடுபுக் கானது, ஆறுள ஒட்டகம்
மூடுபு தாவிடின் மூவணை யாமே.

Those who enter the dense forest cannot see the expansive sky. The five horses that entered the enclosure got tamed. There are six camels. If they are subdued (and attached to yokes) they become three pairs (and get tamed).

Hindu Organ

Friday, October 29, 1976

## Administration of Temples

In the context of the recent reawakening in the field of religious work, it is appropriate that the administration of Saiva Shrines should be given due attention. Temples in Sri Lanka are mostly administered by officiating High Priests who derive a hereditary title. A few are managed by local religious bodies. Some are under the proprietorship of individuals having legal title to the lands on which such temples stand. The question that engages public attention is whether these temples of all categories are properly administered according to Agamic requirements.

There are temples that have been declared Public Trusts but with the internal administrative authority allowed by common consent to be the concern of the Hereditary Trustee. The ordinary worshipper seldom worries himself about administrative efficiency of the management, he being interested only in the offering of prayer. But the congregation of every temple would not content to be so reticent but would always have comments to make both for and against the management.

Places of worship for Saiva devotees must be true to the description of Temples for which Saiva Agamas have prescribed a code of rites, rituals and other religious performances. But the Saiva Public do not have a Central Spiritual Centre to watch the duties attached to Temples and provide for rectification of irregularities

In South India, the land sanctified by the Four Great Saints, the Temples stand as perpetual monuments of the prehistoric glory of the Saiva Faith. Maharajahs and men of munificence had contributed in cash and materials for the reconstruction and maintenance of the renowned Temples. The administration of these Temples is at present of different categories, the Thillai Chidamparam Nadaraja Temple having its own set-up, while some important temples in Tamil Nad are being administered by the Dharmapura Aatheenam

It is interesting to note that the Saiva Community of South India finding that the Gurus of the Aatheenam a selfless and dedicated band of spiritual teachers, wished that the administration of as many as twentyseven large temples to be placed in the able and trust worthy hands of the capable Heads of the Aatheenam — Sirkali, Nallur - Perumanam Tiru Ayaru — Tirukadavur Vaitheeswaran koil Tiru Nallaru are some of the better known temples administered by the Dharmapura Aatheenam.

We would commend the idea of administration of temples by recognized Aatheenams to the Saiva Public of Sri Lanka. Nallur, Maviddapuram Thiruketheeswaram, Nakuleswaram are of a special order. There are other temples that require to be administered by recognized societies of spiritual fervour. Saiva organizations under the auspices of the Saiva Paripalana Sabhai should make an endeavour to provide for such a central scheme for shrines.

## Literary Research Of Ayurveda

(By Dr. E P. RASIAH, J. P.,
Member Ayurveda Medical Council)

Today, a wave of popular feeling seems to be sweeping across Sri Lanka in favour of raising the standard of Ayurveda to that of Western Medicine. To achieve this desirable objective, many steps have to be taken. First and foremost, the Ayurveda Physicians, scholars and the State should set up a dynamic Organisation, inter alia, to—

(a) collect and preserve valuable publications (ancient and modern) on Ayurveda, rare recipes of efficacious drugs, ola manuscripts containing secret remedies now held by the heirs of dead physicians, as heir-looms.

(b) experienced experts should be asked to check, sift and pick out really worthwhile publications, recipes etc. Such selected ones should be codified, printed and published as finances become available,

(c) obtain photostat copies of rare publications by foreigners on Ayurveda and now preserved in foreign countries.

(d) Establish a central Library specially meant for Ayurveda Medical Studies. It should be the main Institute where one could get authentic information on the origin, history, concepts and achievements of Ayurveda

If we have such a sound Organisation as a sheet-anchor, then we could plan to build on it. the superstructure of Ayurveda in Sri Lanka.

Since the time of the Indus Valley Civilisation (3500 B C.) 'Scholars of Europe had considered it a pilgrimage" to go to India in search of knowledge on the various fields of human activity. particularly in respect of Ayurveda, which dealt with the health, happiness and longevity of humanity. History is replete with instances of such visits by seekers of knowledge from Rome, Egypt, Germany, France and England. The more these scholars studied the Indian writings, the more they became enamoured of the richness and originality of thought and the intrinsic merits of the Indian Medical Science. In fact, if we critically and impartially examine, it would be noted that Allopathy's advances were mostly re-discoveries by Western Scholars of what our ancient Rishis and their disciples had practised earlier.

The under-noted are a few of the remarkable publications lying in the seats of learning in various parts of Europe, perhaps unknown to and untouched by, most of the present-day champions of Ayurveda in the East:-

1. "An Essay on the Antiquity of Hindu Medicine" by Royle (1837)

2. "Commentary on Hindu System of Medicine" of Wise (1860) This contains illustrations of surgical instruments.

3. "Historical Relations of Ancient Hindus with Greek Medicine" of A. Webb (1850)

4 "Coup de ocil la Medicine des Anciens Indiens" of Briane (1858)

5. "Letters Historiques sur letal de la Medicine chez les Indicus" by Leitard (1903)

These are said to contain simple but sure remedies for human ailments. Most of these publications have gone out of stock now, so the available copies are being scrupulously preserved and guarded in the archives, museums and libraries in Europe, Therefore, young intelligent scholars and linguists should be selected and sent abroad to spend some time and secure photostat copies of relevant and essential chapters on Ayurveda from some. if not, all of these monumental works. Without such authentic records regarding the origin and history of Ayurveda, without having a precise historical perspective of the evolution and growth of Ayurveda and a knowledge of the components of medical preparations, one cannot think of developing Ayurveda and much less raising its standard to that of Allopathy.

We are fortunate in having at this juncture, Mr. P. K. Dissanayake, C. A. S., an energetic and conscientious Officer as Head of the Department of Ayurveda. With his keenness to rebuild Ayurveda and secure a place for it in the international Medical Map of the World, we can depend upon him to set things in motion. Besides talented scholars of the eminence of Professor Tuly de Silva and Mr. M. P. Samarasekera, C. A. S., who have already evinced much interest in the resuscitation of Ayurveda, can give us valuable suggestions and guidance to achieve speedily the objectives outlined above.

It is hoped that while the Ayurveda Physicians and members of the public supply useful informations, the State will provide the funds and sponsor the project.

## Ayurveda Physicians Honoured

The Jayanthi day of Dhan-wanthri – the father of Ayurvedic Medicine— was celebrated on a grand scale at the Ovitigala hall, Maradana, on the evening of the 20th instant, when a large number of Ayurvedic physicians from all parts of Sri Lanka and officials gathered and participated. The celebrations were wound up with the award of Titles of honour to deserving physicians of eminence in the medical world and who had rendered solid service to the cause of Ayurveda. Mr. K. P. Dissanayake the commissioner of Ayurveda presented the parchments and congratulated the recipients. Among these distinguished physicians, for the first time in the history of Ayurvade, a lady—Vaidiachari (Mrs. Rita Innasithamby of Sillalai had the distinction of being selected for the coveted honour of "Siddha Ayurveda Vaidia Jothi' by the Samastha Lanka Ayurveda Physicians Congress.

Vaidya Jothi Rita Innasithamby hails from a distinguished family of hereditary ayurveda physicians from Naranthanai Kayts. Her husband Vaidya Siromani Emil Innasithamby and her son Vaidya Kalanithi Suhanthan Innasithamby together with her form the trio of specialists keenly sought after at Innasithamby Vaidya Nilayam by patients suffering from Kiranthi Roga and allied diseases

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday October 29, 1976.

EDITOR-IN-CHIEF B. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org